@eelamarchive



# கல்வியும் புலிகளும்



"இன்று நாம் ஒரு போர்ச் சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில் எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமான சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது, எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்."

இவ்வாறு தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியை முன்னிட்டு தலைவர் வே. பிரபாகரன் விடுத்த செய்தியில் கூறியுள்ளார். அவரது செய்தியினை முழுமையாகக் கீழே தருகிறோம்.

மிகவும் நவீனமான தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இன்றைய உலகம் நகர்ந்துகொண்டிருக்கிறது. அறிவியலும் தொழில்நுட்பமும் அபார வளர்ச்சிகண்டு உலகத்தின் வளர்ச்சிப்போக்கில் புரட்சிகரமான மாற்றத்தை நிகழ்த்திவருகின்றன. இந்த வளர்ச்சிப்போக்கின் தாக்கத்தினால் முன்னேறிய நாடுகளின் சமூக, பொருண்மிய வாழ்வும் பிரமிக்கத்தக்க வகையில் மாற்றங்கண்டு வருகிறது. இந்தப் புதிய யுகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது அறிவியல், தொழில்நுட்பக் கல்வியாகும்.

அறிவுசார் கல்வியின் வளர்ச்சியால் மாறிவரும் உலக சமூகத்துடன் ஒப்பு நோக்குகையில், எமது தேசத்தின் கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இதற்குப் பிரதான காரணி சிங்கள இனவாத அரச ஒடுக்குமுறையாகும். இந்த ஒடுக்குமுறை எமது தேசத்தின் ஆற்றலையும் சக்தியையும் முடக்கி வைத்திருக்கிறது.

எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித்துறையைச் சிதைத்துவிடச் சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முனைந்துவருகிறது. சிங்கள மொழித்திணிப்பில் தொடங்கி, தரப்படுத்தல் என்றும், வெட்டுப்புள்ளி என்றும், காலத்திற்குக் காலம் தமிழரின் கல்வியைச் சீர்குலைப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது, இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்த கல்வி அழிப்புக் கொள்கை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இப்படியான அரச ஒடுக்குமுறையின் நெருக்குதல்கள் காரணமாக, எமது கல்வித்துறை என்றுமில்லாதவாறு பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது.

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில், எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக்கு உட்பட்டதாக, சில ஆக்கவேலைகளைச் செய்து வருகிறது. பெரியதொரு போருக்கு முகங்கொடுத்தவாறு, சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்பாடுகள் இருக்கவே செய்யும். விடுதலைவேண்டிப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலைபெற்று, நிலையான அமைதியும் உறுதியான அரசும் தோன்றும்பொழுதுதான், நாம் எமது சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்த படிநிலைக்குக் கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுதுதான் கல்வித்துறையையும் சீரானமுறையில் சீரமைத்து, எமது நாட்டின் நலன்பேணும் வகையில் மேம்பாடுசெய்ய முடியும். அறிவியல், தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து எமது நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடிவிற்கும் விமோசனத்திற்கும் தேசிய விடுதலை அத்தியாவசியமானது என்பதை, நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புகளையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின், நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். இதனால்தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சியமாக வரித்துக்கொண்டு நாம் போராடுகிறோம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்குகளையும் இலக்குகளையும் மாணவ சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வை வளர்த்து, மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஆசிரிய சமூகம் முயற்சிக்க வேண்டும். தேச விடுதலை என்பது, எல்லோரது விடுதலையையும் விடிவையும் குறித்து நிற்கும் ஒரு பொதுவான குறிக்கோள்; ஒரு தேசிய இலட்சியம். இந்த இலட்சியத்தில் எல்லோரும் பற்றுக்கொள்ளும்பொழுதுதான் தமிழரின் சுதந்திர இயக்கம் வலுமிக்க சக்தியாக உருப்பெறும்.

இன்று நாம் ஒரு போர்ச் சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில், எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமான சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் 1992 இல் தொடங்கப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு, இம்முறையும் சிறப்புற நடைபெற்றுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தேர்வுக்காகப் பல்வேறு வகைகளிலும் உழைத்த அனைவரையும் பாராட்டுவதோடு, இத்தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் உச்சப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்வுகொள்கிறேன்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழீழ ஆவணக்காப்பகம்